# சக்கர வியுகம்

தினசரி புலனாய்வு நாளிதழ்

SAKKRA VIYUGAM

www.sakkraviyugam.com | TNTAM/25/A1018 | sakkraviyugam2025@gmail.com

VOLUME : 01 | ISSUE: 196 | 09.1.2026 | FRIDAY | MARGAZHI : 24 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 196 | 09.1.2026 | வெள்ளிக்கிழமை | மார்கழி : 24 | விலை : ரூ.5/–


## ரூ.3,000 ரொக்கத்துடன்

# "பொங்கல் பரிசுத்தொகுப்பு"

## முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!



■ தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை ஆலந்தூரில், பொங்கல் தொகுப்பினை தொடங்கி வைக்க.., அதன் தொடர்ச்சியாக திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத்தொகுதி , #சித்தையன்கோட்டை கடை எண் : 3ல், நடைபெற்ற நிகழ்வில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பினையும், ரூ.3000 பொங்கல் பரிசுத்தொகையும் வழங்கி திட்டத்தை தொடங்கி வைத்தார்.

சென்னை: ஜன.9-

ரூ.3,000 ரொக்கத்துடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணியை முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை ஆலந்தூரில் தொடங்கி வைத்தார்.

பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாட 2 கோடியே 22 லட்சத்து 91,710 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வாழும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு ஆகியற்றுடன் ரூ.3,000 ரொக்கத்துடன் சேர்த்து வழங்கும் பணியை



சென்னை ஆலந்தூரில் நேற்று (வியாழக்கிழமை) காலை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே. ஆர். பெரியகருப்பன், சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, தமிழச்சி தங்கபாண்டியன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மற்ற மாவட்டங்களில் ரொக்கப் பணம் ரூ.3,000, பொங்கல் பொருள்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு அமைச்சர்கள் வழங்கி பணியை நேற்று தொடங்கி வைக்கின்றனர். பொங்கல் தொகுப்புடன் விலையில்லா வேட்டி, சேலைகளும் அனைத்து குடும்ப அட்டைகளுக்கும் வழங்கப்படுகிறது.

முன்னதாக இதற்கான டோக்கன் விநியோகம் கடந்த திங்கள் அன்று தொடங்கியது. நியாய விலைக் கடைபணியாளர்கள் வீடு வீடாகச் சென்று டோக்கன் விநியோகித்தனர். இதுதவிர, கடைகளுக்குப் பொருட்கள் வாங்க வருவோரிடமும் டோக்கன்கள் வழங்கினர்.



## திருப்பூரில் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தை தொடங்கி வைத்தார் அமைச்சர் மு.பெ.சாமிநாதன்

### திருப்பூர் மாவட்டத்திற்கு கூடுதலாக 8,02,201 குடும்ப அட்டைதாரர்களுக்கு 802 மெட்ரிக்டன் பச்சரிசி, சர்க்கரை ஒதுக்கீடு

திருப்பூர், ஜன.9-

மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே இ.ஆ.ப அவர்கள் தலைமையில், மேயர் ந.தினேஷ்குமார் அவர்கள் முன்னிலையில், திருப்பூர் மாநகராட்சி, குப்பாண்டம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரொக்கப்பணம், பொங்கல் பரிசுத்தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகளை வழங்கினார்கள்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள் தெரிவித்தாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடைய ஆதரவோடு 2021 ஆம் ஆண்டு மே திங்கள் 7ம் நாள் முதலமைச்சராக பொறுப்பேற்றார்கள். அந்த காலகட்டம் என்பது ஒரு கொரோனா காலகட்டம் ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாத ஒரு சூழ்நிலையில் நாம் தவித்துக் கொண்டிருந்தோம் எனவே அந்த கட்டத்திலே முதலமைச்சராக பொறுப்பேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதி எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில், தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை தமிழர்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் வருகின்ற 2026ம் ஆண்டு தைப்பொங்கலுக்கு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் ரூ.3000/ ரொக்கத்துடன் தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 1 முழுக்கரும்பு வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கி துவக்கி வைத்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் 8,02,201 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3000/ ரொக்கத்துடன் பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் இலவச வேட்டி, சேலைகள் வழங்கப்படவுள்ளது.

மேலும், கூட்டுறவுத்துறை மூலம் 848 முழுநேர நியாயவிலை கடைகளிளும் 348 பகுதி நேர நியாயவிலை கடைகளிளும் மொத்தம் 1196 நியாய விலைக் கடைகளிலும் இன்று 76,9580 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படவுள்ளது. மகளிர் சுய உதவிகுழுக்கள் நடத்தும் 13 நியாய விலைக்கடைகள் மூலம் 20,860 குடும்ப அட்டைதாரர்களுக்கும், தமிழ்நாடு நுகர் பொருள்வாணிபக் கழகம்

நடத்தும் 22 நியாய விலைக்கடைகள் மூலம் 11,439 குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலங்கை தமிழர்மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் 322 குடும்ப அட்டைதாரர்கள் அடங்கும். இவ்வாறு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் பிரபு, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் திரு.இல.பத்மநாபன், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.சிவபிரகாஷ், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்கள் திருமதி பிரபா, திருமதி தேவி உள்ளிட்ட கூட்டுறவு சங்க நிர்வாகிகள், உள்ளாட்சி

அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## மத்திய அரசின் தடைகளை தாண்டி பேரூராட்சிகளிலும் நூறு நாள் வேலைத் திட்டம் செயல்படுத்தப்படும்

### பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

சின்னாளபட்டி, ஜன.9-

மத்திய அரசின் தடைகளை தாண்டி பேரூராட்சிகளிலும் நூறு நாள் வேலைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று சித்தையங்கோட்டையில் நடைபெற்ற பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழாவில் அமைச்சர் அவர்கள் ஐ.பெரியசாமி பேசியதோடு, தமிழகத்தில் எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையை உருவாக்கியவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

தமிழக மக்கள் பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாட 2 கோடியே 22 லட்சத்து 91,710 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வாழும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு ஆகியற்றுடன் ரூ.3,000 ரொக்கத்துடன் சேர்த்து வழங்கும் பணியை சென்னை ஆலந்தூரில் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல்



பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி சித்தையங்கோட்டையில் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் ச.சரவணன் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் இராகவ்பாலாஜி திமுக மாநில செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்; பாறைப்பட்டி ராமன், கூட்டுறவு துணைப் பதிவாளர் (பொது விநியோகத்திட்டம்) எஸ்.பி.கார்த்திகேயன், சரக துணைப் பதிவாளர் கார்த்திக் கௌதம், கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குநர் செல்வகுமார், ஆகியோர் முன்னிலை வகி;த்தனர். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திமுக மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினை வழங்கிவிட்டு பேசும்போது இன்று தமிழகம் வளர்ந்த மாநிலமாக உள்ளது. இதைப் பொறுக்காத ஒன்றிய அரசு பல்வேறு தொந்தரவுகளை தமிழக அரசுக்கு கொடுத்து வருகிறது. 100 நாள் வேலை திட்டத்தை முடக்கும் வகையில் சட்டங்கள் இயற்றியுள்ளது. எத்தனை இடையூறு வந்தாலும் கிராம ஊராட்சிகளில் 100 நாள் வேலை திட்டத்தை தமிழக அரசு தொடர்ந்து செயல்படுத்தும். இதைத் தவிர பேரூராட்சிகளிலும் பொதுமக்களின் நலன் கருதி 100 நாள் வேலை திட்டம் செயல்படுத்தப்படும். கடந்த அதிமுக ஆட்சியில் நிறுத்தப்பட்ட முதியோர் உதவித் தொகை இப்போது சுமார் 10 ஆயிரம் பேருக்கு கிடைத்துள்ளது. இது உதவித் தொகை இல்லை. அவர்களின் வாழ்வாதாரம். தமிழக அரசு ஒவ்வொரு நலத்திட்டங்களையும் அடித்தட்டு மக்களின் நலன் கருதி செயல்படுத்தி வருகிறது. மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வர் திட்டம், மடிக்கணினி திட்டம் போன்ற திட்டங்களால் உலக நாடுகளுடன் நமது மாணவர்கள் போட்டிபோடும் நிலை உருவாகியுள்ளது. அதற்கு காரணம் தரமான கல்வி இங்கு கிடைப்பதால்தான். நிகழ்ச்சியில் நிறைவாக ஆத்தூர் வட்டார பொது வினியோகத்திட்ட கூட்டுறவு சார்பதிவாளார் அறிவழகன் நன்றி கூறினார்.



■ தென்காசி மாவட்ட தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி கிளையின் சார்பில், தென்காசி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அ. ரேணுகா அவர்களை சந்தித்து, புத்தாண்டு வாழ்த்து கூறி, தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி நாள்காட்டி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாநில மாவட்ட வட்டார பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.




## வேளாங்கண்ணியில் ஹெலிகாப்டர் சேவை: ஜனவரி இறுதியில் பயன்பாட்டுக்கு கொண்டுவர திட்டம்



நாகப்பட்டினம், ஜன.9-

சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் வேளாங்கண்ணியில் இம்மாத இறுதியில் ஹெலிகாப்டர் சேவை தொடங்கப்பட உள்ளது. நாகை மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் வேளாங்கண்ணியில் ஹெலிகாப்டர் சேவை தொடங்கப்பட உள்ளது. டெல்லியை சேர்ந்த ஜெயம் ஏவியேஷன் என்ற நிறுவனத்துடன் இதற்கான ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

இதற்காக வேளாங்கண்ணி பேராலயத்துக்குச் சொந்தமான இடத்தில் 10 ஆயிரம் சதுர அடியில் ஹெலிபேட் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வேளாங்கண்ணியைச் சுற்றி 25 கி.மீ வான் பரப்பளவில் ஹெலிகாப்டரில் சுற்றிப் பார்க்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த ஹெலிகாப்டரில் 6 பேர் வரை பயணிக்க முடியும். வேளாங் கண்ணி பகுதியை சுற்றிப் பார்க்க 10 நிமிடத்துக்கு ஒரு நபருக்கு சுமார் ரூ.6,000 கட்டணம் நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

45 நிமிடங்களில்... உட்கட்டமைப்பு தயாரானதும், சென்னை, மதுரை, திருச்சி மற்றும் பெங்களூரு போன்ற நகரங்களில் இருந்தும் நேரடி சேவை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருச்சியில் இருந்து வேளாங்கண்ணிக்கு சாலை மார்க்கமாக செல்ல 3 மணி நேரத்துக்கு மேல் ஆகும் நிலையில், ஹெலிகாப்டர் மூலம் 45 நிமிடங்களில் சென்றடையலாம்.

மாவட்ட நிர்வாகத்தின் இந்த முயற்சி, வேளாங்கண்ணிக்கு வரும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது சுற்றுலாப் பயன்பாட்டுக்கு மட்டுமல்லாமல், பேரிடர் மேலாண்மை மற்றும் மருத்துவ அவசரகாலங்களுக்கும் பயன்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத தொடக்கத்தில் ஹெலிகாப்டர் சுற்றுலா தொடங்க வாய்ப்பு உள்ளதாகத் தெரிகிறது.

## 443 நாட்களுக்கு பிறகு மேட்டூர் நீர்மட்டம் 100 அடிக்கு கீழ் சரிவு



மேட்டூர், ஜன.9-

மேட்டூர் / தருமபுரி: மேட்டூர் அணை நீர்மட்டம் 443 நாட்களுக்கு பிறகு 100 அடிக்கு கீழ் சரிந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பு விநாடிக்கு 6,000 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு 2025 ஜூன் 12ல் தண்ணீர் திறக்கப்பட்டது. அப்போது, அணையின் நீர்மட்டம் 114.91 அடியாகவும், நீர் இருப்பு 85.58 டிஎம்சியாகவும், நீர்வரத்து 6,339 கன அடியாகவும் இருந்தது. தொடர்ந்து, கனமழையால் கர்நாடகாவில் உள்ள கபினி, கேஆர்எஸ் அணைகள் நிரம்பின. காவிரியில் உபரி நீர் திறக்கப்பட்டதால் மேட்டூர் அணை முழு கொள்ளளவான 120 அடியை ஜூன் 29ம் தேதி எட்டியது. இதையடுத்து அணையின் 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் வெளியேற்றப்பட்டது. தொடர் மழையால் மேட்டூர் அணை 7 முறை முழு கொள்ளளவை எட்டியது. பின்னர், காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை குறைந்ததால் நீர்வரத்து சரிந்து, அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது.2024 அக். 23ம் தேதி மேட்டூர் அணை நீர்மட்டம் 100 அடியை எட்டியது. நேற்று காலை வரை 443 நாட்களாக அணையின் நீர்மட்டம் 100 அடிக்கு மேல் நீடித்து சாதனை படைத்த நிலையில், நேற்று காலை நீர்மட்டம் 99.84 அடியாகவும், நீர் இருப்பு 64.63 டிஎம்சியாகவும் குறைந்தது.

தண்ணீர் திறப்பு குறைப்பு: அணைக்கு விநாடிக்கு 208 கனஅடியாக நீர்வரத்து இருந்த நிலையில், டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பு நேற்று மாலை 6 மணி முதல் விநாடிக்கு 8,000 கனஅடியிலிருந்து 6,000 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. கால்வாய் பாசனத்துக்கு 400 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது.ஒகேனக்கல் காவிரியில் விநாடிக்கு 2,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று முன்தினம் காலை 3,000 கனஅடியாக அதிகரித்தது. அதே நேரத்தில், நேற்று காலை மீண்டும் 2,000 கனஅடியாக குறைந்தது.

## பெருமாநல்லூர் அருகே கோயில் அகற்றம்: போராட்டத்தின்போது இந்து முன்னணி தலைவர் காயம்




திருப்பூர், ஜன.9-

பெருமாநல்லூர் அருகே கோயிலை அகற்றியதற்கு கண்டனம் தெரிவித்து நடைபெற்ற போராட்டத்தின்போது நடந்த தள்ளுமுள்ளுவால் இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம் லேசான காயமடைந்தார். திருப்பூர் மாவட்டம் அவிநாசியை அடுத்துள்ள பெருமாநல்லூர் ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட ராக்கியாபட்டி அறிவொளி நகர் பகுதியில் குமரன்குன்று என்ற பெயரில் முருகன், விநாயகர், சிவலிங்கம், நந்தி உள்ளிட்ட சந்நிதிகள் கொண்ட செல்வ முத்துக்குமார சுவாமி கோயில் 2 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.அரசுக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து கோயில் கட்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், நீதிமன்ற உத்தரவுப்படி நேற்று வருவாய்த் துறையில் கோயிலை இடித்து அகற்றினர். இதையறிந்த இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம், பொதுச் செயலாளர் கிஷோர்குமார் உள்ளிட்டோர் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது போலீஸாருக்கும், இந்து முன்னணியினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் காடேஸ்வரா சுப்பிரமணியத்துக்கு லேசான காயம் ஏற்பட்டது. பின்னர், அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி, அனைவரையும் சமாதானப்படுத்தினர்.இதையடுத்து, திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காடேஸ்வரா சுப்பிரமணியம் சேர்க்கப்பட்டார். அங்கு இந்து முன்னணியினர் மற்றும் பாஜகவினர் திரண்டதால் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

இதற்கிடையில், இந்த சம்பவத்தைக் கண்டித்து தாராபுரம் சாலை, அவிநாசி சாலை, காந்தி நகர், புஷ்பா திரையரங்கு சந்திப்பு, புதிய பேருந்து நிலையம் என 5 இடங்களில் மறியலில் ஈடுபட்ட இந்து முன்னணியினர் 120 பேர் கைது செய்யப்பட்டனர்.இந்து முன்னணி மாநில அமைப்பாளர் ச.ராஜேஷ் செய்தியாளர்களிடம் கூறும்போது, “திமுக மற்றும் கூட்டணிக் கட்சியினரின் தூண்டுதலால், அதிகாரிகள் கோயிலை இடித்துள்ளனர். அங்கு சென்ற இந்து முன்னணி மாநிலத் தலைவர் மீது தாக்குதல் நடத்தியதில், அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. 100 ஆண்டுகள் பழமையான வழிபாட்டுத் தலத்தை இடிக்க கூடாது என்ற சட்டத்தை மீறி, கோயிலை இடிக்க உத்தரவிடுவதே தண்டனைக்குரிய குற்றமாகும். அத்துமீறிய போலீஸார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றார்.

## சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டம்: 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



சென்னை, ஜன.9-

காலமுறை ஊதியம், மற்றும் சிறப்பு ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கக் கோரி சத்துணவு அங்கன்வாடி ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.தமிழ்நாடு சத்துணவு அங்கன்வாடி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் சென்னை ஆட்சியர் அலுவலகம் அருகே நேற்று நடந்தது.

அக் கூட்டமைப்பின் அமைப்பாளர் இ.மாயமலை தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் 500க்கும் மேற்பட்ட சத்துணவு பணியாளர்கள் அங்கன்வாடி ஊழியர்கள் கலந்துகொண்டனர்.போராட்டம் குறித்து செய்தியாளர்களிடம் மாயமலை கூறியதாவது: சத்துணவு அங்கன்வாடி ஊழியர்களுக்கான சிறப்பூதியம் ரூ.2 ஆயிரத்தில் இருந்து ரூ.6,750 ஆக உயர்த்தி வழங்கப்படும். அதோடு பணிக்கொடை ரூ.5 லட்சம் வழங்கப்படும் என திமுக தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தது.

அதை நம்பி நாங்களும் வாக்களித்தோம். ஆனால், ஆட்சிக்கு வந்து நான்கரை ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் எங்களின் ஒரு கோரிக்கையைகூட அரசு நிறைவேற்றவில்லை. முதல்வர் வெளியிட்ட புதிய ஓய்வூதியத் திட்டத்தால் எங்களுக்கு எந்த பயனும் கிடைக்காது.

12 லட்சம் அரசு ஊழியர்களில் முக்கால் வாசி பேர் சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள்தான். ஓய்வூதிய விஷயத்தில் சத்துணவு அங்கன்வாடி பணியாளர்களையும் அரசு பாகுபாடுடன் நடத்துகிறது.பிப்.3 முதல் பணி புறக்கணிப்பு: காலமுறை ஊதியம், ஓய்வூதியத்தை ரூ.6,750 ஆக உயர்த்தி வழங்குவது, பணிக்கொடை ரூ.5 லட்சம், காலியாகவுள்ள 60 ஆயிரம் சத்துணவு, அங்கன்வாடி பணியாளர் இடங்களை நிரப்புவது, அரசு ஊழியர்களைப் போன்று 12 மாத மகப்பேறு விடுப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜன.30ம் தேதி அன்று சென்னையில் லட்சக்கணக்கான சத்துணவு பணியாளர்களும் அங்கன்வாடி ஊழியர்களையும் திரட்டி முதல்வர் அலுவலகத்தில் முறையீடு செய்வோம். எங்கள் கோரிக்கைகளையும், திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகளையும், உயர் நீதிமன்ற உச்ச நீதிமன்ற தீர்ப்புகளையும் நிறை வேற்றாவிட்டால் பிப்.3ம் தேதி முதல் பணிகளைப் புறக்கணித்துவிட்டு காலவரையற்ற தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்திலும், தொடர் மறியல் போராட்டத்திலும் ஈடுபடுவோம். இவ்வாறு அவர் கூறினார். தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜெஸி உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## “தந்தைக்கு துரோகம் செய்த அன்புமணிக்கு மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்” : ராமதாஸ்



சென்னை, ஜன.9-

“தந்தையிடம் இருந்து கட்சியை அபகரிக்க நினைத்த இந்தக் கும்பலுக்கு ஓட்டுபோடுவதா என்று மக்கள் அன்புமணிக்கு ஓட்டுபோடமாட்டார்கள்” என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்று சொல்வார்கள். ஆனால் தந்தையிடம் இருந்து கட்சியை அபகரிக்க நினைத்த இந்த கும்பலுக்கா ஓட்டுபோடுவது என்று மக்கள் அன்புமணிக்கு ஓட்டுப்போடமாட்டார்கள். பாமக நான் உருவாக்கிய கட்சி. இதற்கு யாரும் உரிமை கொண்டாட முடியாது. என்னிடம் இருந்து கட்சியைப் பறிப்பதற்கு சதித் திட்டம் தீட்டி சூழ்ச்சியோடு அன்புமணி செயல்படுவதை மக்கள் அறிவார்கள்.

அன்புமணி சிவில் நீதிமன்றத்துக்கு வேண்டுமானால் செல்லலாம். அன்புமணி கூட்டணி பேசுவது ஒரு கூத்து, நாடகம். என் தலைமையில்தான் கூட்டணி பற்றி பேச முடியும். நான் அமைப்பதே பாமக கூட்டணி. நான் சேரும் கூட்டணிதான் ஆட்சி அமைக்கும். கட்சி என்னிடம்தான் உள்ளது. அன்புமணி பாமகவில் இல்லை. பாமகவின் நிறுவனர் மற்றும் தலைவர் பதவியை நானே எடுத்துக் கொண்டேன்.

நான் செய்த சத்தியத்தை மீறி அன்புமணியை மத்திய அமைச்சர் ஆக்கினேன். அன்புமணி எனக்கு வேட்டு வைப்பார் என்று எனக்கு முன்பே தெரியவில்லை. நான் ஆரம்பித்த கட்சியை உரிமை கொண்டாட யாருக்கும் தகுதியில்லை. அன்புமணி செய்த தில்லுமுல்லு காரணமாகவே பாமகவில் இருந்து அவரை நீக்கினேன். ஒரு கோஷ்டியை வைத்துக்கொண்டு என்னை மோசமாக விமர்சித்தனர். தந்தைக்கு துரோகம் இழைத்த நபருக்கு யார் ஓட்டுப் போடுவார்கள். அன்புமணியின் கூட்டணி பேச்சுவார்த்தை நீதிமன்ற அவமதிப்பு. கூட்டணி விவகாரம் குறித்து இரண்டு நாட்களுக்குள் முடிவு தெரிவிக்கப்படும். அது தேசிய அளவிலான கூட்டணியாக இருக்கலாம், திராவிடமாக இருக்கலாம் அல்லது தமிழக கட்சியாக இருக்கலாம்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## கொல்கத்தா ‘ஐபேக்’ அலுவலகத்தில் அமலாக்கத் துறை சோதனை: மம்தா பானர்ஜி கடும் கண்டனம்



கொல்கத்தா, ஜன.9-

அரசியல் ஆலோசனை நிறுவனமான ‘ஐபேக்’ மிறிகிசி கொல்கத்தா அலுவலகம் மற்றும் அதன் இணை நிறுவனர் பிரதிக் ஜெயினின் வீடு ஆகிய இடங்களில் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது. இதற்கு மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

‘ஐபேக்’ நிறுவனத்தின் இயக்குநரான பிரதிக் ஜெயின், திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தகவல் தொழில்நுட்ப அணியின் தலைவராக உள்ளார். திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு அரசியல் ஆலோசனை வழங்கக்கூடிய நிறுவனமாகவும், அந்த கட்சியின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஊடகப் பிரிவை கவனித்துக் கொள்ளக்கூடிய நிறுவனமாகவும் ‘ஐபேக்’ உள்ளது.

இந்நிலையில், கொல்கத்தாவின் லோடன் தெருவில் உள்ள பிரதிக் ஜெயினின் இல்லம், ‘ஐபேக்’நிறுவனத்தின் அலுவலகம் உள்ளிட்ட இடங்களில் இன்று காலை அமலாக்கத்துறை சோதனை நடத்தினர்.

இதையடுத்து, பிரதிக் ஜெயினின் வீட்டுக்குச் சென்ற திரிணமூல் காங்கிரஸ் தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி, பின்னர் வீட்டுக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், ‘‘அமலாக்கத் துறையினரின் இந்த சோதனை நடவடிக்கை அரசியல் உள்நோக்கம் கொண்டது; அரசியலமைப்புக்கு எதிரானது.

அவர்கள் எங்கள் கட்சியின் ஆவணங்களையும் சட்டமன்றத் தேர்தலுக்கான எங்கள் வேட்பாளர்களைப் பற்றிய விவரங்களையும் ஹார்ட் டிஸ்குகளை பறிமுதல் செய்து கொண்டிருந்தனர்.

நான் அவற்றை அவர்களிடம் இருந்து மீட்டுக் கொண்டு வந்தேன். அரசியல் கட்சியின் தரவுகளைச் சேகரிப்பது அமலாக்கத்துறையின் கடமையா?. இதற்கும், நிதி முறைகேடு தொடர்பான விசாரணைக்கும் எந்த தொடர்பும் இல்லை. இது ஒரு பழிவாங்கும் நடவடிக்கை. உள்துறை அமைச்சர் நாட்டை பாதுகாப்பவரைப் போல அல்லாமல், மிகவும் மோசமான அமைச்சரைப் போல நடந்து கொள்கிறார்’’ என குற்றம் சாட்டினார்.

அமலாக்கத்துறையின் விசாரணையில் மம்தா பானர்ஜி தலையிட்டுள்ளதாகவும் இது சட்டத்துக்கு விரோதமான செயல் என்றும் பாஜக மூத்த தலைவரும் மேற்கு வங்க சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய சுவேந்து அதிகாரி, ‘‘அமலாக்கத்துறை விசாரணை மேற்கொள்ளும் இடத்துக்குள் முதல்வர் மற்றும் கொல்கத்தா காவல் ஆணையர் வருவது நெறிமுறையற்றது. இது அரசியலமைப்புக்கு விரோதமானது. மத்திய அமைப்பின் விசாரணையில் நேரடியாக தலையிடும் முயற்சி இது’’ என குற்றம் சாட்டினார்.



## மதுரை அருகே முதல்வரின் கார் டயர் வெடித்ததால் பரபரப்பு

மதுரை, ஜன.9-


திண்டுக்கல் அரசு விழாவில் பங்கேற்றுவிட்டு மதுரை விமான நிலையம் திரும்பும் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்ற காரின் டயர் திடீரென வெடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

திண்டுக்கல்லில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்க முதல்வர் ஸ்டாலின் நேற்று முன்தினம் விமானம் மூலம் மதுரை வந்தார். தனியார் ஓட்டலில் தங்கிய முதல்வர் நேற்று காலை கார் மூலம் திண்டுக்கல்லுக்குச் சென்றார்.

அரசு விழாவில் பங்கேற்றுவிட்டு மதியம் கார் மூலம் மதுரை விமான நிலையத்துக்குப் புறப்பட்டார். மதுரை தனக்கன்குளம் நான்கு வழிச்சாலையில் பகல் 12.50 மணிக்கு முதல்வர் சென்ற காரின் இடது முன்பக்க டயர் திடீரென வெடித்தது.

இதனால் கார் நிலை தடுமாறியபோதிலும் சுதாரித்துக் கொண்ட ஓட்டுநர், உடனே சாலையோரம் காரை நிறுத்தினார். பின்னால் பாதுகாப்புக்கு வந்த கான்வாய் துறை அதிகாரிகள், கட்சியினரின் கார்களும் நிறுத்தப்பட்டன.

இச்சம்பவத்தில் முதல்வர் காயமின்றி தப்பினார். பின்னர் மற்றொரு கார் ஏற்பாடு செய்யப்பட்டு, முதல்வர் அதில் மதுரை விமான நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார். பின்னர் விமானம் மூலம் சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றார்.



## சென்னையில் 10, 11ம் தேதிகளில் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம்: மாநகராட்சி தகவல்

சென்னை, ஜன.9-

சென்னையில் 10, 11ம் தேதிகளில் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில்; சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 4,079 வாக்குச்சாவடி மையங்களிலும், தகுதியுள்ள குடிமக்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வசதியாக, ஜன.10 (சனிக்கிழமை) மற்றும், ஜன.11 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய 2 நாட்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த டிச.19ம் தேதி வெளியிடப்பட்டது. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் பெறும் காலம் கடந்த டிச.19ம் தேதி முதல் ஜன.18 வரை உள்ளது. ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் காலத்தில், தகுதியுள்ள குடிமக்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வசதியாக, அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் 27.12.2025 (சனிக்கிழமை), 28.12.2025 (ஞாயிற்றுக்கிழமை), 3.1.2026 (சனிக்கிழமை) மற்றும் 4.1.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது.



# திருவையாறு ஸ்ரீதியாகராஜர் ஆராதனை விழா: பஞ்சரத்ன கீர்த்தனைகளை பாடி இசையஞ்சலி

தஞ்சாவூர், ஜன.9-

திருவையாறு தியாகராஜர் ஆராதனை விழாவில் நேற்று ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான இசைக் கலைஞர்கள் பஞ்சரத்ன கீர்த்தனைகளை பாடியும், இசைத்தும் சத்குரு தியாகராஜர் சுவாமிக்கு இசையஞ்சலி செலுத்தினர்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜர் சுவாமிகள், தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு காவிரிக் கரையில் முக்தி அடைந்தார். இங்கு அவரது சமாதி அமைந்துள்ளது.

ஆண்டுதோறும் இங்கு தியாகராஜர் ஆராதனை விழா விமரிசையாக நடைபெறும். அந்த வகையில், நடப்பாண்டு தியாகராஜர் சுவாமிகளின் 179வது ஆராதனை விழா கடந்த 3ம் தேதி தொடங்கியது. சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.சுரேஷ்குமார் விழாவைத் தொடங்கிவைத்தார். தொடர்ந்து, ஏராளமான இசைக் கலைஞர்களின் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உஞ்ச விருத்தி ஊர்வலம்: நிறைவு நாளான நேற்று தியாகராஜர் சிலைக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து, தியாகராஜர் வாழ்ந்த இல்லத்தில் இருந்து உஞ்ச விருத்தி ஊர்வலம் தொடங்கியது. இதில் ஏராளமானோர் பங்கேற்றனர். பின்னர், காலை 9 மணியளவில் பிரபஞ்சம் பாலச்சந்திரனின் புல்லாங்குழல் இசையுடன் பஞ்சரத்ன கீர்த்தனை தொடங்கியது.

பிரபல இசைக் கலைஞர்கள் சுதா ரகுநாதன், மஹதி, ஓ.எஸ் .அருண், கடலூர் ஜனனி, பின்னி கிருஷ்ணகுமார், அரித்துவாரமங்கலம் ஏ.கே.பழனிவேல், ஸ்ரீமுஷ்ணம் ராஜாராவ் உட்பட ஆயிரத்துக்கும் அதிகமான இசைக் கலைஞர்கள், ஆர்வலர்கள் கலந்துகொண்டு, ஒருமித்த குரலில் பஞ்சரத்ன கீர்த்தனைகளைப் பாடியும், இசைக் கருவிகளை இசைத்தும் ஸ்ரீதியாகராஜருக்கு இசையஞ்சலி செலுத்தினர்.

பின்னர், பி.சுசித்ரா குழுவினரின் ஹரி கதை, தாமல் ராம கிருஷ்ணனின் உபன்யாசம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து இரவு வரை இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தியாகராஜ சுவாமிகள் வீதியுலாவுக்குப் பின், ஆஞ்சநேய உற்சவத்துடன் விழா நிறைவு பெற்றது.

# பர்தா அணிந்து முகத்தை மூடி கடைக்கு வர தடை: திருட்டை தடுக்க பிஹார் தங்க நகை வியாபாரிகள் நடவடிக்கை

புதுடெல்லி, ஜன.9-



பிஹாரில் ஹிஜாப், பர்தா உள்ளிட்டவை அணிந்து முகத்தை மூடிய படி வரும் வாடிக்கையாளர்களுக்கு நகை வியாபாரிகள் தடை விதித்துள்ளனர்.

நாட்டில் தங்கம் மற்றும் வெள்ளி விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. அதே சமயம் நகைக்கடைகளில் தங்கம் திருட்டும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் நகைத் திருட்டை தடுக்கும் பொருட்டு அகில இந்திய நகைக்கடை மற்றும் பொற்கொல்லர் கூட்டமைப்பின் (ஏஐஜேஜிஎப்) பிஹார் பிரிவு ஒரு புதிய முடிவை எடுத்துள்ளது.

இதன்படி, முகத்தை முழுவதுமாக மூடிய படி கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு நகை விற்பனை செய்வதும் அவர்களை கடைக்குள் அனுமதிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஏஐஜேஜிஎப் கூட்டமைப்பின் பிஹார் மாநிலத் தலைவர் அசோக் குமார் வர்மா கூறும்போது,"பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தற்போது நகைகள் மதிப்பு மிகுந்த பொருளாக மாறி விட்டன. ஒரு சவரன் தங்கம் ஒரு லட்சத்தை தாண்டியுள்ளது. வெள்ளி ஒரு கிராம் விலை ரூ.300ஐ நெருங்கியுள்ளது. இந்த சூழலில் வாடிக்கையாளர்கள் ஹெல்மெட், முக்காடு, ஹிஜாப், பர்தா, நகாப் உள்ளிட் டவை அணிந்து வரும்போது சிக்கல் எழுகிறது.

இவர்கள் மூன்று, நான்கு பேர் கொண்ட குழுவாக நகைக் கடையில் கொள்ளையில் ஈடுபடவும் வாய்ப்புள்ளது. பல மாநிலங்களில், பர்தா அணிந்த கொள்ளையர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். கடைக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளன. இதுபோன்ற சம்பவங்களைத் தடுக்கவே இந்த புதிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

முக்காடு, ஹிஜாப், நகாப், பர்தா உள்ளிட்டவற்றை அகற்றுவது எங்கள் நோக்கம் அல்ல. இவற்றை அணிந்துள்ள வாடிக்கையாளர்கள் கடைக்குள் வருவதற்கு முன்தங்கள் முகத்தை காட்ட வேண்டும் என்று கோருவதே எங்கள் நோக்கம்" என்றார். இந்த அறிவிப்புக்கு பிஹாரின் காவல் துறையினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.



# 10, பிளஸ் 2 பொதுத்தேர்வுக்கு விண்ணப்பிக்க தனித்தேர்வர்களுக்கு வாய்ப்பு

சென்னை, ஜன.9-

தமிழகத்தில் 10, பிளஸ் 2 பொதுத் தேர்வுக்கான தனித் தேர்வர்கள் தட்கல் முறையில் ஜன. 9, 10ல் விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து தேர்வுத் துறை இயக்குநரகம் வெளியிட்ட அறிவிப்பு: 10, பிளஸ் 2 வகுப்புகளுக்கான பொதுத்தேர்வு மற்றும் பிளஸ் 1 அரியர் தேர்வுகள் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற உள்ளன. இதற்கு விண்ணப்பிக்கத் தவறிய தனித்தேர்வர்கள் தட்கல் முறையில் ஜன.9, 10ம் தேதிகளில் கல்வி மாவட்ட வாரியாக உள்ள தேர்வுத் துறை சேவை மையங்களில் விண்ணப்பிக்கலாம்.

கூடுதல் விவரங்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறியலாம். விண்ணப்பிக்கும்போது வழங்கப்படும் ஒப்புகைச் சீட்டை பத்திரமாக வைக்க வேண்டும். அதில் உள்ள எண்ணைக் கொண்டே மாணவர்கள் ஹால்டிக்கெட்டுகளை பதிவிறக்கம் செய்ய முடியும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்கும் விவகாரம்: இந்தியாவுக்கு 500% வரி விதிக்கும் மசோதாவுக்கு ட்ரம்ப் ஒப்புதல்

வாஷிங்டன், ஜன.9–



ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதால், இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கான வரியை 500% உயர்த்த வழிவகுக்கும் மசோதாவுக்கு அந்நாட்டு அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஆதரவு அளித்திருப்பதாக குடியரசு கட்சியின் செனட்டர் லிண்ட்சே கிரஹாம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலின்போது, தான் அதிபரானால் உக்ரைன் ரஷ்யா போரை 24 மணி நேரத்தில் முடிவுக்குக் கொண்டு வருவேன் என உறுதி அளித்தார் டொனால்டு ட்ரம்ப். ஆனால், இதுவரை போர் முடிவுக்கு வரவில்லை. ஏறக்குறைய நான்கு ஆண்டுகளாக போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ட்ரம்ப்பின் முயற்சிகள் முழு அளவில் பலன் தரவில்லை.

இந்நிலையில், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு 500% இறக்குமதி வரி விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. குடியரசு கட்சியின் செனட்டரும் ட்ரம்ப்பின் பாதுகாப்பு கொள்கைகளுக்கான ஆதரவாளருமான லிண்ட்சே கிரஹாம், ஜனநாயகக் கட்சியின் செனட்டர் ரிச்சர்ட் ப்ளூமென்தால் ஆகியோர் இணைந்து இதற்கான மசோதாவை தயாரித்துள்ளனர்.

கிரஹாம்ப்ளூமென்தால் மசோதா என்று அழைக்கப்படும் இந்த மசோதாவை அமெரிக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய அதிபர் டொனால்டு ட்ரம்ப் பச்சைக் கொடி காட்டி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

அதிபர் டொனால்டு ட்ரம்ப்பை, லிண்ட்சே கிரஹாம் நேற்று (புதன்கிழமை) சந்தித்ததாகவும், அப்போது பல மாதங்களாக உருவாக்கப்பட்டு வரும் இந்த மசோதாவுக்கு அதிபர் தனது ஆதரவை தெரிவித்ததாகவும் கிரஹாம் கூறியதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். போரை முடிவுக்குக் கொண்டு வர உக்ரைன் பல சலுகைகளை வழங்கி வரும் நிலையிலும், ரஷ்ய அதிபர் புதின் தொடர்ந்து அப்பாவி மக்களை கொல்வதால் இது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையாக இருக்கும் என்று கிரஹாம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த மசோதா அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அது சட்டமாக மாறும். அதன்பிறகு ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கான ஏற்றுமதிக்கு 500% வரி விதிப்பு உறுதிப்படுத்தப்படும்.

எனவே, இந்த சட்டம் நடைமுறைக்கு வந்தால், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா, சீனா, பிரேசில் போன்ற நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

# “அதிமுக ஆட்சி அமைத்தால்கூட அதை பாஜக தான் கட்டுப்படுத்தும்” கார்த்தி சிதம்பரம்

திருச்சி, ஜன.9–



“அதிமுகவுக்கு இருந்த சுதந்திரம் போய்விட்டது. தப்பித் தவறி அவர்கள் ஆட்சி அமைத்தால்கூட அந்த ஆட்சியை பாஜக தான் கட்டுப்படுத்தும்” என்று திருச்சி விமான நிலையத்தில் கார்த்தி சிதம்பரம் கூறினார்.

திருச்சி விமான நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான இண்டியா கூட்டணி வலுவாக உள்ளது. ஆட்சியில் பங்கு கேட்பது என்பது புதுமையான கோரிக்கை கிடையாது. அனைத்துக் கட்சிகளுக்கும் ஆட்சியில் தங்களுடைய பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என விரும்புவார்கள்.

தற்போது அனைவரின் கவனமும் தேர்தலில் வெற்றி பெறுவது தான். அதற்கு முன்பாக தொகுதி உடன்பாடு, தேர்தலில் வெற்றி பெறுவது என்று பல விஷயம் இருக்கிறது. வெற்றி பெற்று வந்த பின்பு மற்றவை குறித்து பேசிக் கொள்வோம்.

அதிமுகவுக்கு என்று இருந்த சுதந்திரம் போய்விட்டது. தப்பித் தவறி அவர்கள் ஆட்சி அமைத்தால் கூட அந்த ஆட்சியை பாஜக தான் கட்டுப்படுத்தும். ஒவ்வொரு சீசனுக்கும் பறவைகள் வந்து செல்வது போல தற்போது தேர்தல் நேரத்தில் பிரதமரும், மத்திய அமைச்சர்களும் அடிக்கடி தமிழகம் வந்து செல்வார்கள். தமிழ் மொழி, கலாச்சாரம் உள்ளிட்டவை தான் எங்களுக்கு மிகவும் பிடித்தமானது என அவர்கள் பேசுவார்கள்.

ஜனநாயகன் திரைப்படத்துக்கு சென்சார் வழங்குவது தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. நான் அந்தப் படத்தை பார்க்கப் போவதும் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# தண்ணீர் விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம்: தெலங்கானாவுக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வேண்டுகோள்

அமராவதி, ஜன.9-



தண்ணீர் விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம் என்று தெலங்கானா அரசுக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோதாவரி நதி மீது கட்டப்பட்டு வரும் போலவரம் அணைக்கட்டு கட்டுமானப் பணிகளை ஹெலிகாப்டர் மூலம் முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று பார்வையிட்டார்.

பின்னர் அவர் போலவரத்தில் செய்தியாளர்களிடம் பேசியதாவது: போலவரம் அணை கட்டுவது குறித்து தெலங்கானா அரசு, ஆட்சேபம் தெரிவித்து வருவது வருந்தத்தக்கது. கடலில் கலக்கும் நதி நீரை யார் வேண்டுமானாலும் உபயோகப் படுத்திக் கொள்ளலாம். இதில் அரசியல் தேவையற்றது.

தெலங்கானா மக்களும் இதை புரிந்து கொள்ள வேண்டும். தெலுங்கு இன மக்கள் அனைவரும் சமமானவர்களே. மக்களுக்காக அரசியல் செய்தால் நல்லது. ஆனால், அரசியலுக்காக மக்களை அவதியுறச் செய்யக்கூடாது. ஆர்டிஎஸ் பகுதியில் தண்ணீர் பிரச்சினை வந்தபோது மகபூப் நகருக்கு நாங்கள் தண்ணீர் வழங்கினோம்.

கல்வகுர்த்தி, தேவாதுலா அணைகளை நான்தான் தொடங்கி வைத்தேன். சமீபகாலமாக சிலர் பேசுவதைக் கேட்கையில், பல விஷயங்கள் புரியாத புதிராக உள்ளது. தேவாதுலா அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட்டால், அது போலவரம் அணைக்கு வரும். கீழ்த் தட்டில் உள்ள போலவரத்துக்கு தண்ணீர் வருவது இயற்கை. இதில் என்ன தவறு ? கோதாவரி நதியில் தேவைக்கேற்ற அளவுக்கு தண்ணீர் உள்ளது.

தேவையான தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். உபரி நீரை நாகார்ஜுன சாகர், சைலம் போன்ற அணைகளிலும் நிரப்பிக் கொள்ளுங்கள். கிருஷ்ணா நதிக்கு நீர்வரத்து குறையும்போது, அதன் மேல் பாகத்தில் அணை கட்டினால் நஷ்டம் வரும்.

கிருஷ்ணா டெல்டா பகுதிகளைக் காப்பாற்றி கோதாவரியுடன் கிருஷ்ணா நதி நீரை இணைத்தால்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். ஒரு பொய்யை நூறு முறை சொன்னாலும் உண்மையாகாது. கடலில் வீணாக கலக்கும் நீரை, தடுத்து நிறுத்தினால் உங்களுக்குத் தான் (தெலங்கானா) நஷ்டம்.

ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் போலவரம் அணையை கண்டுகொள்ளவில்லை. இதனால் 6 ஆண்டு காலம் நாம் நஷ்டம் அடைந்தோம். தற்போது மீண்டும் அப்பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. விரைவில் போலவரம் அணை நாட்டுக்கு அர்ப்பணிக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

# “எங்கள் கூட்டணியில் விஜய் சேர்ந்தால் அசைக்க முடியாத சக்தியாக மாறுவார்” : தமிழிசை கணிப்பு

கோவை, ஜன.9-

தேசிய ஜனநாயக கூட்டணியுடன் சேரும்போது தான், விஜய் அசைக்க முடியாத சக்தியாக மாறுவார் என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.கோவை விமான நிலையத்தில் நேற்றுஅவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: திமுக அவதூறு செய்து கொண்டு இருந்ததால், அமித்ஷா அவதூறு ஷாவாகத்தான் இருப்பார். நல்லவர்களுக்கு அன்பான ஷாவாக இருப்பார்.

மத்திய அரசு மீது இதுவரை ஊழல் குற்றச்சாட்டுகள் கிடையாது. ஊழல் இல்லாமல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம். இதுபோல திமுக இருக்கின்றதா? தமிழ்நாட்டில் திமுக அதிக ஊழல் செய்யும் கட்சியாக இருக்கிறது.எங்களை பார்த்து கொண்டு இருப்பதற்கு பதிலாக திமுக கூட்டணியில் காங்கிரஸ் இருக்கிறதா என பார்க்கட்டும். தேசிய ஜனநாயக கூட்டணி பலம் பெற்று வருகிறது. இண்டியா கூட்டணி வெலவெலத்து வருகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணியுடன் சேரும்போது தான், விஜய் அசைக்க முடியாத சக்தியாக மாறுவார். இல்லாவிட்டால் அவர் அசைத்துப் பார்க்கின்ற கட்சியாக தான் இருப்பார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு திமுகவை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற பொறுப்பு இருக்கிறது. விஜய்க்கும் அதே பொறுப்பு இருக்கிறது. அது தனியாக முடியுமா? அணியாக முடியுமா என்பதை விஜய் யோசிக்க வேண்டும்.

சட்டப்பேரவைத் தேர்தலில் அரசியல் எதிரியை தான் எதிர்க்க வேண்டும். கொள்கை எதிரியை அல்ல. விஜய் சிந்திக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.



# சமுத்ர பிரதாப் கப்பல் சுய சார்பை வலுப்படுத்தும்: பிரதமர் மோடி கருத்து

புதுடெல்லி, ஜன.9-

‘சமுத்ர பிரதாப்’ கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது, நமது சுயசார்பு பார்வையை வலுப்படுத்தும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்து உள்ளார்.இந்தியக் கடலோர காவல் படையின் ஐ.சி.ஜி.எஸ். சமுத்ர பிரதாப் என்ற கப்பலை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கடந்த 5ம் தேதி நாட்டுக்கு அர்ப்பணித்தார். இது இந்தியாவின் முதல், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மாசு கட்டுப்பாட்டு கப்பல் ஆகும்.இதுகுறித்து பிரதமர் நரேந்திர மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், “இந்தியக் கடலோர காவல் படையின் ‘சமுத்ர பிரதாப்’ கப்பல் சேவையில் இணைக்கப்பட்டது பல காரணங்களுக்காகக் குறிப்பிடத்தக்கது. இது நமது சுய சார்பு பார்வையை வலுப்படுத்துவதுடன், நமது பாதுகாப்பு கட்டமைப்பை மேம்படுத்து கிறது. மேலும், சுற்றுச்சூழலைப் பேணுவதில் நமது உறுதிப்பாட்டை இது பிரதிபலிக்கிறது” என கூறப்பட்டுள்ளது.

# கிரீன் மேஜிக் பால் பாக்கெட் பெயரை மாற்றி விலை உயர்வா?

## ஆவின் நிர்வாகம் திட்டவட்டமாக மறுப்பு

சென்னை, ஜன.9-

ஆவின் கிரீன் மேஜிக் பால் பாக்கெட் பெயரை மாற்றி அளவை குறைத்து விலையை ஆவின் நிர்வாகம் உயர்த்தி விற்பதாக புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு பால் முகவர்கள் நலச் சங்கத்தலைவர் பொன்னுசாமி கூறியதாவது: ஆவின் நிர்வாகம், நான்கரை சதவீத கொழுப்புச்சத்து கொண்ட நிலைப்படுத்தப்பட்ட பச்சைநிற பால் பாக்கெட்டை அதாவது, கிரீன் மேஜிக் பெயரை மாற்றி 500 மிலி பாக்கெட்டில் 50 மிலி அளவை குறைத்து, லிட்டருக்கு ரூ.11 வரை விற்பனை விலையை உயர்த்தி தஞ்சாவூரில் விற்பனை செய்துள்ளது.




இது தமிழகம் முழுவதும் விரைவில் அமல்படுத்த வாய்ப்பு உள்ளது. ஏற்கெனவே உள்ள பாலில் கொழுப்பு சத்து மற்றும் அளவை குறைத்து விற்பனை விலையை உயர்த்துவது ஏற்றுக்கொள்ளமுடியாது.

கொள்முதல் விலையை உற்பத்தியாளர்களுக்கு உயர்த்திவிட்டு, அதன் அடிப்படையில் விற்பனை விலையை உயர்த்தினால் கூட ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் ஊழல் செய்வதற்காகவும் மக்கள் வரிப்பணத்தை வீணடிக்கும் வகையிலும் மறைமுகமாக விலை உயர்வை திணிக்கும் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

ஆவின் நிர்வாகம் மறுப்பு: இந்நிலையில் இதனை ஆவின் நிர்வாகம் மறுத்துள்ளது. இதுகுறித்து வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: தமிழகத்தில் தினசரி ஆவின் மூலம் 31 லட்சம் லிட்டர் பால் விநியோகம் செய்யப்படுகிறது.

குறிப்பாக சென்னையில் தினசரி 15 லட்சம் லிட்டர் பால் மற்றும் மாதம் ஒன்றுக்கு ரூ.30 கோடி மதிப்பிலான பால் உப பொருட்கள், 35 ஆவின் ஜங்ஷன் பாலகங்கள், 200 ஆவின் பாலங்கள் மற்றும் 860 சில்லரை விற்பனையாளர்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது.

தமிழகம் முழுவதும் ஆவின் பால் விலை மற்றும் வகைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. ஆவின் பால் அனைத்து பகுதியிலும் தடையின்றி விநியோகம் செய்யப்படுகிறது. எனவே, பால் விலையேற்றம் என வெளியிடப்படும் செய்தி முற்றிலும் தவறு மற்றும் ஆதாரமற்றது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# முதல்வருக்கு வரவேற்பு அளிக்கவந்தபோது விபத்தில் சிக்கிய திமுக மூத்த நிர்வாகி மறைவிற்கு அமைச்சர் ஐ.பெரியசாமி அஞ்சலி

சின்னாளபட்டி, ஜன 9-

திண்டுக்கல் மேட்டுப்பட்டி 7வது வார்டைச் சேர்ந்த மூத்த திமுக உறுப்பினர் கிருஷ்ணசாமி (87) அவர்கள் தமிழக முதல்வரை காண சின்னாளபட்டி பிரிவிற்கு வந்தபோது விபத்தில் சிக்கி மரணம் அடைந்தார். இச்செய்தியை கேள்விப்பட்டவுடன் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கிருஷ்ணசாமியின் இல்லத்திற்கு சென்று இறுதி மரியாதையை செலுத்தினார். மூத்த உறுப்பினரான கிருஷ்ணசாமி அய்யா அவர்கள் 87 வயதிலும் உடல்நிலை பாராமல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் வந்த கழகத் தலைவரை (மு.க.ஸ்டாலின்) காண சென்று விபத்தில் சிக்கி மரணம் அடைந்தது வேதனை அளிக்கிறது. தள்ளாத வயதிலும் கழகப்பற்றுடன் இருக்கும் சின்னாளபட்டி கைத்தறி நெசவாளர்களால்தான் இந்த இயக்கம் மேலோங்கி நிற்கிறது. அன்னாரது குடும்பத்திற்கு தேவைப்படும் உதவிளை நிச்சயம் செய்வேன் என்றார். நிகழ்ச்சியின் போது திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், பேரூர் கழக பொறுப்பாளர் பாலகிருஷ்ணன் திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜா, துணைத் தலைவர் ஆனந்தி பாரதிராஜா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், துணை அமைப்பாளர் மெல்வின், பேரூர் இளைஞரணி அமைப்பாளர் வினோத் ஒச்சப்பன், 7வது வார்டு உறுப்பினர் ஹேமலதா தம்பித்துரை மற்றும் பேரூர் கழக பொறுப்பாளர்கள், வார்டு செயலாளர்கள் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



■ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்கள் திருப்பூர் மாவட்டம் திருமுருகன்பூண்டி நகராட்சி ராக்கியாபாளையம் சாலையில், புதிதாக கட்டப்பட்டுள்ள நகராட்சி அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்தார்கள் உடன் திருப்பூர் மேயர் ந.தினேஷ்குமார், மண்டல இயக்குனர் (நகராட்சி நிர்வாகம்) ராஜாராம், திருமுருகன் பூண்டி நகர் மன்றத் தலைவர் குமார், திருமுருகன்பூண்டி நகராட்சி ஆணையர் பால்ராஜ் ஆகியோர் உடன் உள்ளனர்.

# தென்காசி மாவட்டம் வென்றி லிங்கபுரத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கட்டிட திறப்பு விழா

சங்கரன்கோவில், ஜன. 9-

தென்காசி மாவட்டம் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியம் பட்டாடை கட்டி ஊராட்சி வென்றிலிங்கபுரத்தில், 34.6 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய பள்ளியின் புதிய கட்டிட திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மேல நீலிதநல்லூர் யூனியன் சேர்மன் மாதவி தலைமை வகித்தார். யூனியன் துணைத் தலைவர் பாரதி கண்ணன், ஒன்றிய குழு உறுப்பினர் அருள் சீலி பண்டாரக்கண்ணு ஆகியோர் முன்னிலை



வகித்தனர். பட்டாடை கட்டி ஊராட்சி மன்ற தலைவர் சுமதி கனகவேல் வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட கவுன்சிலர் ராஜா தலைவர் புதிய வகுப்பறை கட்டடத்தை திறந்து வைத்தார். விழாவில் பஞ்சாயத்து செயலாளர் யோகநாதன், ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியர் துரைப்பாண்டியன் அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சந்தனகுமார் பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் ஹரி பாலகிருஷ்ணன், ஆசிரியர்கள் சித்ரா, மாரித்துரைச்சி, ராமமூர்த்தி மற்றும் பெற்றோர்கள், ஊர் பொதுமக்கள், வார்டு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து 8.5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி திறக்கப்பட்டது. முடிவில் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெய கணேஷ் நன்றி கூறினார்.



■ ஜன.09 பொங்கல் பண்டிகை முன்னிட்டு அரிசி ரேஷன் கார்டுதாரர்களுக்கு தலா 3000 ரூபாய் ரொக்கம், ஒரு கிலோ பச்சரிசி, சக்கரை, முழு கரும்பு அடங்கிய பரிசு தொகுப்பு அத்துடன் சேர்த்து இலவச வேட்டி சேலையும் தமிழக முதல்வர் எம் கே ஸ்டாலின் தொடங்கி வைத்த நிலையில், அதை தொடர்ந்து தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் 0. 929 சங்கரன்கோயில் கூட்டுறவு பண்ட சாலையில் பொங்கல் பரிசு தொகுப்புடன் தொகை ரூபாய் 3000 ஒரு கிலோ பச்சரிசி சர்க்கரை உலக கரும்பு முழு கரும்பு அத்துடன் அத்துடன் வேஷ்டி சேலை பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது

# பிஹாரில் பள்ளி ஆசியர்களுக்கு தெருநாய் கணக்கிடும் பணி

பாட்னா, ஜன.09-

பிஹாரின் சசாரம் மாநகராட்சி தனது எல்லைக்குள் செயல்படும் அனைத்து பள்ளிகளுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதில், தெரு நாய்கள் பற்றிய தகவல் களை சேகரிக்கவும் பகிர்ந்து கொள்ளவும் பொறுப்பு அலுவலர் ஒருவரை (ஆசிரியரை) நியமிக்குமாறு உத் தரவிட்டுள்ளது. இதன்படி பள்ளி வளாகத்தைச் சுற்றிலும் காணப்படும் தெரு நாய்களின் எண்ணிக்கை, அவற்றின் தற்போதைய நிலை குறித்து மாநகராட்சிக்கு ஆசிரியர் கள் தெரிவிக்க வேண்டும். இதுகுறித்து சசாரம் மாநக ராட்சி ஆணையர் விகாஸ் குமார் கூறுகையில், "அரசு வழிகாட்டுதலின் அடிப்படையில் தான் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. திட்டமிடலுக்கு உதவுவதற்காக தெரு நாய்கள் குறித்த துல்லியமான, உள்ளூர் அளவி லான தகவல்களை சேகரித்து வழங்கிட பொறுப்பு அலுவலரை நியமிக்குமாறு கல்வி நிறுவனங்கள் கேட் டுக்கொள்ளப்பட்டுள்ளன" என்றார். ஆசிரியர்களுக்கு இதுபோன்ற பணிகள் தரப்படுவதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது.



■ தென்காசி மாவட்டம் மத்தாளம் பாறை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் உள்ள நியாய விலை கடையில், மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர்.இ.ஆ.ப. முன்னிலையில் 4,79,753 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு, இலங்கைத் தமிழா் மறுவாழ்வு முகாம் வசிக்கும் 184 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புப்பையுடன் ரூ3000 ரொக்கத் தொகை மற்றும் வேட்டி, சேலையினை வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்.. உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். பழனி நாடார் (தென்காசி), ஈ. ராஜா ( சங்கரன் கோயில்), கூட்டுறவு சங்கங்களில் தென்காசி மண்டல இணை பதிவாளர் கு. நரசிம்மன் ஆகியோர் உள்ளனர்.

# நெல்லை பணகுடியில் கஞ்சா போதை வாலிபரால் பள்ளி மாணவன் வெட்டிக் கொலை

நெல்லை, ஜன,9-

நெல்லை பணகுடியில் பத்தாம் வகுப்பு பள்ளி மாணவன் லட்சுமணன் கடந்த ஐந்தாம் தேதி அன்று சபரி ராஜன் என்ற கஞ்சா போதை வாலிபரால் அரிவாளால் வெட்டப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில், மாணவன் கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரி பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி



மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், மாணவன் இன்று காலையில் உயிரிழந்தான். கொலை வழக்காக மாற்றி பணகுடி போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஐந்தாம் தேதி இரவே குற்றவாளி சபரி ராஜா கைது செய்யப்பட்ட நிலையில் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிவகிரியில் தி.மு.க. எம்.பி கனிமொழியின் 58 வது பிறந்தநாள் விழா

சிவகிரி, ஜன.9-

சிவகிரியில் தி.மு.க. துணை பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற குழு தலைவருமான கவிஞர் கனிமொழி எம்.பி.யின் 58 வது பிறந்தநாள் விழாவை யொட்டி திமுகவினர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

நிகழ்ச்சிக்கு திமுக மாநில மருத்துவ அணி துணைச்செயலாளர் டாக்டர் செண்பகவிநாயகம், வாசுதேவநல்லூர் யூனியன் சேர்மனும், வடக்கு ஒன்றிய திமுக செயலாளருமான பொன் முத்தையா பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் யு.எஸ்.டி. சீனிவாசன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

வாசுதேவநல்லூர் தொகுதி பொறுப்பாளர், தென்காசி வடக்கு மாவட்ட




திமுக துணைச்செயலாளர் மனோகரன், தென்காசி வடக்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர் சுமதி, தென்காசி மாவட்ட அரசு வழக்கறிஞர் மருதப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிவகிரி பேரூர் பொறுப்பாளர் நல்லசிவன் அனைவரையும் வரவேற்றார்.பிறந்த தின விழாவை முன்னிட்டு தி.மு.க. கொடி கம்பத்தில் கொடியேற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. சிவகிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் நோயாளிகளுக்கு பிஸ்கட் பிரட் பழங்கள் வழங்கப்பட்டது. சிவகிரி பஸ் நிலையம் முன்பாக, காந்திஜி கலையரங்கம் முன்பாக பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. முன்னாள் முதல்வர் கருணாநிதி திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தேவிபட்டணத்தில் சால்ட் தொண்டு நிறுவனம் சார்பாக இயங்கும் ஆதரவற்றோர் குழந்தைகள் இல்லத்தில் பிறந்தநாள் கேக் வெட்டி குழந்தைகளுக்கு வழங்கினர். தொடர்ந்து அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் அரசு மருத்துவமனை டாக்டர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், தி.மு.க. நிர்வாகிகள் சி.எஸ்.மணி, விக்னேஷ் ராஜா, ராமச்சந்திரன், பாலகுரு, கார்த்திக், தங்கராஜ், முத்துலட்சுமி, விக்னேஷ், இளையராஜா, மதுரைவீரன், சாமுவேல், கங்காதரன், துரைராஜ், புல்லட் கணேசன், ரத்தினராஜ், தங்க தமிழ்ச்செல்வன், தங்கரத்தினம், பெரியாண்டவர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நன்றி கூறினர். சால்ட் தொண்டு நிறுவன குழந்தைகள் இல்லம் நிர்வாகிகள் அருட் சகோதரிகள் புனித ராணி மேரி, குட்டி இளவரசி ஆகியோர்



# தென்காசியில் நிரந்தர ஊழியர்களின் தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டிட கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

தென்காசி : ஜன 09-

தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சார்பில் நிரந்தர ஊழியர்களின் தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டிட, மின்வாரியத்தில் பணியாற்றும் நிரந்தர பணியாளர்கள், கேங் மேன் பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள், பகுதி நேர பணியாளர்கள் என அனைவரின் கோரிக்கைகளையும் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் தென்காசி செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தென்காசி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பட்ட முத்து தலைமை தாங்கினார். சிஐடியு மாவட்ட செயலாளர் மணிகண்டன் துவக்க உரையாற்றினார். தென்காசி கோட்ட செயலாளர் இளையராஜா, சங்கரன்கோவில் கோட்ட செயலாளர் சிவராஜ், கடையநல்லூர் கோட்ட செயலாளர். சேவியர் அந்தோணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்.மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாவட்ட துணை தலைவர் அயூப் கான் நிறைவுரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஜவகர் நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# "எங்கள் கூட்டணிக்கு அதிமுகதான் தலைமை" அமித் ஷா சந்திப்புக்குப் பின் இபிஎஸ் பேட்டி

சென்னை, ஜன.09-

"தமிழகத்தில் எங்கள் கூட்டணிக்கு அதிமுகதான் தலைமை. ஓபிஎஸ், சசிகலாவுக்கு அதிமுகவில் இடமில்லை என ஏற்கெனவே தெளிவுபடுத்தி விட்டேன்" என அதிமுக பொதுச் செயலாளர் இபிஎஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது, "அமித்ஷா விடம் கூட்டணி குறித்து எதுவும் பேசவில்லை, தமிழ்நாட்டின் அரசியல் சூழல் குறித்து என்னிடம் கேட்டறிந்தார்.



அண்மையில், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா புதுக்கோட்டைக்கு வந்தபோது அவரை சந்திக்க முடியாததால் டெல்லியில் சென்று சந்தித்தேன். கள்ளக் குறிச்சி, சேலத்தில் அதிமுக பொதுக்கூட்டம் இருந்ததால் அமித் ஷாவை நேரில் சந்திக்க முடியவில்லை.

யாருடன் கூட்டணி பேச்சுவார்த்தை என வெளிப்படையாக பேச முடியாது. ரகசியமாக இருந்தால்தான் அரசியல் கட்சிக்கு அந்தஸ்து உண்டு. தமிழகத்தில் எங்கள் கூட்டணிக்கு நாங்கள்தான் தலைமை. ஓபிஎஸ், சசிகலாவுக்கு அதிமுகவில் இடமில்லை என ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டேன். அதிமுக உட்கட்சி விவகாரத்தில் தலையிட மாட்டோம் என அமித் ஷா ஏற்கெனவே கூறிவிட்டார். தொடர்ந்து அப்படிதான் இருக்கிறது" என்றார்.

மேலும், அதிமுக கூட்டணியில் டிடிவி தினகரன் இணைவாரா? என்ற கேள்விக்கு இபிஎஸ் மறுப்பு தெரிவிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. மேலும், "ஒரு சில கட்சிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடக்கிறது. அதை வெளிப்படையாக சொல்ல முடியாது. பின்னர் அறிவிக்கப்படும்" என்றார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000